பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

15 09 2025 6.30

திங்கட்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- நடப்பு நிதியாண்டில் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நக்ஸலைட் பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய் மற்றும் பாம்புக்கடிக்கான மருந்துகள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- திருப்பத்தூர், சேலம் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலக ஸ்பீட் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

நடப்பு நிதியாண்டில் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கமே இதற்கு காரணம் என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><<><><<

நக்ஸலைட் பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஜார்க்கண்ட் மாநில காவல்துறையினருடன் இணைந்து பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நக்ஸலைட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்த இந்த நபர் சுட்டுக்கொல்லப்பட்டு இருப்பது நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>><<><><<

வக்ஃப் திருத்த சட்டம் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சட்டம் தொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் நீண்ட விவாதத்திற்கு பின்னர் நிறைவேற்றப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டம் இஸ்லாமியர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் என்றும் அவர் கூறினார்.

*குறிப்பாக ஏழை இஸ்லாமியர்களுக்கு இந்த சட்டம் வரப்பிரசாதமாகும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.*

*தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலினும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த சட்டத்தின் சில பிரிவுகளின் செயலாக்கத்திற்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*>><><><<*

*தமிழகத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய் மற்றும் பாம்புக்கடிக்கான மருந்துகள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாய்க்கடி பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.*

*>><><><<*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயன் பெறுவார்கள் என்று மத்திய அரசு கூறியுள்ளது.*

*வரிக்குறைப்பு காரணமாக இந்த சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.*

*பால் பொருட்களுக்கான வரிக்குறைப்பு தங்களுக்கு மிகவும் பயன் அளிக்கும் என்று திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த உணவக உரிமையாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – உரிமையாளர் – 42 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்..*

***(Tune)***

*சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.*

*இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள்.*

*(சவுண்ட் பைட் - மோடி சுற்றுச்சூழல் – 161 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*திருப்பத்தூர், சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 51 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி சந்திரகலா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

------------

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் அருகே கிணற்றில் தவறி விழுந்த புள்ளிமானை தீயணைப்புத் துறையினர் மீட்டனர்.

--------------

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

---------------

சென்னையில் போதைப்பொருள் விற்பனை செய்த பெண் ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>><><><<

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக ஸ்பீட் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றது.

சீனாவின் Beidaihe வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஆயிரம் மீட்டர் சீனியர் பிரிவில் ஆனந்த்குமார் வேல்குமார் தங்கப் பதக்கம் வென்று வரலாற்றுச்சாதனை படைத்தார்.

ஆடவர் ஆயிரம் மீட்டர் ஜூனியர் பிரிவில் கிருஷ் ஷர்மா தங்கப் பதக்கம் வென்றார்.

---------------

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் விக்கி மற்றும் சுஜித் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

குரேஷியாவின் Zagreb-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 97 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் விக்கி, பெலாரஸின் Aliaksandr Hushtyn -வை வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சுஜித், வடகொரியாவின் Kim Kwang Jin -ஐ வென்றார்.

-------------

இஸ்தான்புல் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 11-7, 11-9, 11-6 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Evgeny Tikhonov-ஐ வென்றார்.

---------------

கிராண்ட் Swiss செஸ் போட்டியின் இந்தியாவின் வைஷாலி பட்டம் வென்றார்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக கேன்டிடேட்ஸ் செஸ் போட்டியில் பங்கேற்பதற்கு வைஷாலி தகுதி பெற்றுள்ளார்.

---------------

கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தியா ரமேஷ் பட்டம் வென்றார்.

---------------

ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது இந்தியாவின் முகமது சிராஜிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

>> End of News <<